பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பெங்கால் புயல் கனமழையைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டு தண்ணீர் தேங்கி நின்ற குரோம்பேட்டை ஜி.எஸ்.டி ரோடு பார்ட்ஸ் மேம்பாலம் அருகில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா.மோ.அன்பரசன் நேரில் கள ஆய்வு மேற்கொண்டு உடனடியாக நீர் வடிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு உணவு மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கினார் அப்பொழுது பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளருமான இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் ஏ.கே. கருணாகரன், மாநகராட்சி உயர் அதிகாரிகள், நெடுஞ்சாலை துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.11.2024) சென்னை பள்ளிக்கரணை, நாராயணபுரம் ஏரியில் இயந்திரம் மூலம் ஆகாயத்தாமரை அகற்றும் பணியினை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டலக் குழுத் தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

கேரள மாநிலம் – வைக்கம் பகுதியில் – ரூ.8.14 கோடி மதிப்பில்

தந்தை பெரியார் நினைவகம் - நூலகக் கட்டிட இறுதிக் கட்டப் பணிகள்!

தமிழ் வளர்ச்சி – செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

வைக்கம், டிச. 01 -

கேரளா மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நினைவகம் மற்றும் நூலக கட்டிட இறுதி கட்டப் பணிகளை நேற்று (30.11.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வைக்கம் நகராட்சி தலைவர் திருமதி. பிரிதா ராஜேஷ், துணை தலைவர் சுபாஷ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (நினைவகம்) கு.தமிழ்செல்வராஜன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் செல்வராஜன், மணியரசு (மின்), தமிழ்நாடு அரசின் கேரள மாநில தொடர்பு அலுவலர் ஆர்.உண்ணிகிருஷ்ணன், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ. செந்தில் அண்ணா, உதவி செயற்பொறியாளர்கள் மோகனகிருஷ்ணன், கனகராஜ், உதவி பொறியாளர் ஜெயம்கொண்டான் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் அவர்கள் கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீன முறையில் மறுசீரமைக்கவும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்கள் கூடுதலாக இடம் பெறுவதற்கும் ரூ.8.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி, கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில், வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவிடத்தை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல், ரூ.8.14/- கோடி கட்டுமான பணிக்கான நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டது.

நினைவக அருங்காட்சியகம் 175.70 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் முதல் தளம் விரிவாக்கம் செய்தல், ஏற்கனவே உள்ள பழைய நூலக கட்டடத்தினை இடித்து விட்டு அவ்விடத்தில் புதிய நூலக கட்டடம் அமைத்தல், தரை தளத்தில் 120 சதுர மீட்டர் பரப்பளவில் நூலகம் மற்றும் முதல் தளத்தில் 120 சதுர மீட்டர் பரப்பளவில் தங்கும் அறை என மொத்தம் 240 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் முதல் தள கட்டடமாக அமைத்தல், சிறுவர் பூங்கா மறுசீரமைப்பு செய்தல், திறந்த வெளி அரங்கத்தில் (Amphi Theatre) சீரமைப்புப் பணிகள் செய்தல், ஏற்கனவே உள்ள சுற்றுப்புறச் சுவரினை பழமை மாறாமல் புதுப்பித்து, முன்புற முகப்பு நுழைவு வளைவு (Entrance Arch) அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அருங்காட்சியக கட்டிடத்தில் தந்தை பெரியாரின் வாழ்க்கை புகைப்படங்கள் இடம் பெற உள்ளது. சுமார் மூன்றாயிரம் (3000 Nos) புத்தகங்கள் கொண்டு பெரியார் நூலகம் அமையப் பெற உள்ளது.

அதனைத்தொடர்ந்து, நினைவகம் மற்றும் நூலக கட்டட இறுதிக்கட்ட பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் - இன்று 500 மருத்துவ முகாம்கள்!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, டிச.1-

பெஞ்சல் புயல் காரணமாக ரெட் அலர்ட் உள்ள சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் இன்று (1.12.2024) 500 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு :-

முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி பெஞ்சல் புயல் காரணமாக ரெட் அலர்ட் உள்ள சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய 7 மாவட்டங்களில் 500 மருத்துவ முகாம்கள் இன்று (1.12.2024) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடத்தப்படும்.

இதில் சென்னையில் 200 மருத்துவ முகாம்களும் மற்றும் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் தலா 50 மருத்துவ முகாம்கள் என ஆக மொத்தம் 500 மருத்துவ முகாம்கள் நாளை நடத்தப்படும். இந்த மருத்துவ முகாம்கள் எண்ணிக்கையினை தேவைக்கேற்ப அதிகரிக்க மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்மருத்துவ முகாம்களில் காய்ச்சல் - சளி பரிசோதனை, இரத்த கொதிப்பு, நீரிழிவு நோய்க்கான பரிசோதனை போன்ற அடிப்படை பரிசோதனைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. காய்ச்சல் சளி மருந்துகள், இரத்த கொதிப்பு - நீரிழிவு நோய்க்கான மருந்துகள், உப்பு - சர்க்கரை (ORS) கரைசல், நிலவேம்பு குடிநீர், சேற்றுப் புண் மருந்து போன்ற அத்தியாவசிய மருந்துகள் தேவைக்கு அதிகமாக கையிருப்பில் வைத்துக்கொள்ள மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இருப்பிடங்களுக்கு அருகே அமைக்கப்பட உள்ள இந்த மருத்துவ முகாம்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு சார்பில் விழியிழந்தோர் இல்லத்தில் நல உதவிகள்!

இரா.கிரிராஜன் எம்.பி. தலைமையில் ஆர்.எஸ்.பாரதி வழங்குகிறார் !

சென்னை டிச.1 :

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி திமுக சட்டத்திட்ட திருத்தக்குழு சார்பில் தண்டையார்பேட்டை இரட்டைக் குழி தெருவில் உள்ள விழியிழந்தோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (01.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி, பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 15வது வார்டு லட்சுமி நகர், பழைய நா பாளையம், துளசி நகர் ஆகிய பகுதிகளில் தேங்கியிருக்கக்கூடிய மழை நீரை வடிய வைக்கும் பணிகளை மாநகராட்சி ஊழியர்களுடன், பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், 15 வது வட்டச் செயலாளர் கே.அங்குசாமி, 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் ஆகியோர் துரிதப்படுத்தினார்கள். உடன் வட்ட நிர்வாகிகள் பி.டி.ரவிச்சந்திரன், கே.செல்வன், வக்கீல் டில்லி, பாஸ்கர், ஸ்டாலின், மணலி புதுநகர் டோமினிக், பிரான்சிஸ், தேவராஜ், செம்மீன் எடிசன் ஆகியோர் உள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கு சட்டதிட்ட திருத்தக்குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமை வகிக்கிறார். இணைச்செயலாளர் சுபா.சந்திரசேகர் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், 42வது வட்ட செயலாளர் ப.குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி, பங்கேற்று விழியிழந்தோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

சட்டத்துறை தலைவர் இரா.விடுதலை, தலைமை கழக சட்ட ஆலோசகர் பி.வில்சன் எம்.பி, சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் வேலூர் வி.ஞானசேகரன், சட்டத்துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ், சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.கல்யாணசுந்தரம், தென்றல் செல்வராஜ் , கோவை இரா.மோகன், சுபா.சீதாராமன், ஓரத்தநாடு பி. ராஜமாணிக்கம், வழக்கறிஞர் மேலூர் கரு.தியாகராஜன், திருப்பூர் சுப்பையன், தஞ்சை சி.இறைவன், போலீஸ் வெ.கண்ணன், சுப.த.சம்பத், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இரா.நக்கீரன் நன்றி கூறுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர், சந்தவேலூர் ஆண்டாள் நகர், நரிக்குறவர் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி ஏற்பாட்டில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கினார். இதில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சந்தவேலூர் நா.சத்யா மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை! ஜி.ஜெ.பிரபு தலைமை! துணை முதல்வர் பிறந்த நாள்:

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் பேச்சரங்கம்!

நாஞ்சில் சம்பத் – செங்கல்பட்டு நா.அருண் – க.திவ்யா சிறப்புரை!

சென்னை, டிச.1-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்8, ஒளிவீசும் சூரிய கிழக்கு! உதயமே உள்ளத்தின் விளக்கு உரிமையில் பெண்மை உயர்கிறது! உதயம் நிலமெங்கும் ஒளிர்கிறதுஎனும் தலைப்பில் மாபெரும் பேச்சரங்கம் 02.12.2024 திங்கட்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம், டி.கே.ஏ.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இப்பேச்சரங்கத்தில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.ஜெ.பிரபு தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் முன்னிலை அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, கூ.பி.ஜெயின் எம்.சி, வே.வாசு, டி.லோகேஷ், சாவித்திரி வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி, சுதாதீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, ம.ஜெகதீஸ்வரன், சே.பாலாஜி, இரவைபிரவு, என்.பி.எம்.வசந்த், பா.பி.தாஸ், சே.மணிமாறன், வி.எல்.யஷ்வந்த், எம்.எஸ்.அசாருதீன், தீ.ஜெயபால், சு.கமலக்கண்ணன், டி.கே.நல்லரசு, ப.மணிகண்டன், க.சிலம்பரசன், எஸ்.மோகன்ராஜ், சி.எம்.பாரதி, ஏ.வி.ஜான்பால், டிஜிட்டல் ஜி.சுதாகர், எஸ்.ராஜா, ஆர்.சீனிவாசன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் பேச்சரங்கத்தில் திராவிட இயக்க போர் முரசம் நாஞ்சில் சம்பத் தலைமையில் பட்டைதீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் செங்கல்பட்டு நா.அருண் "வேரைத் தாங்கும் விழுதானவர்" எனும் தலைப்பிலும், முனைவர் சு.திவ்யா "நெஞ்சுக்கு நீதியின் பேரன்" எனும் தலைப்பிலும் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும், இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் ஆர்.பிரியாராஜன், ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் முன்னாள் எம்.எல்.ஏ., ஓ.ஏ.நாகலிங்கம். மாநில நிர்வாகிகள் : கே.எஸ்.இரவிச்சந்திரன் முன்னாள் எம்.எல்.ஏ., பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துர, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன் முன்னாள் எம்.எல்.ஏ., எஸ்.மணிமுடி முன்னாள் எம்.எல்.ஏ., கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி எம்.சி, வழக்கறிஞர் இந்திராஜித்

மாவட்ட நிர்வாகிகள் : கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட் ஆசாத் எம்.சி. மண்டலகுழு தலைவர்கள்: சொ.வேலு எம்.சி, சரிதாமகேஷ் குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுல எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமார் எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, எ.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜே.துளசிங்கம், லயன்பி.உதயசங்கர், வி.இரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா.கலைச்செல்வி

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் : ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, நா.துலுக்கானம், எல்.பி.எம்.மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, எம்.பெரோஸ்கான், பி.விஜய்குமார், எம்.வினாயகம், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி. வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சேகர், சு.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, ஜெ.தங்கராஜ், எ.வேதா, விக்னேஷ்சீனி வாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை ஆகியோர் பங்கேற்றுசிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் ஆர்.தீனதயாளன் நன்றி கூறுகிறார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 (அ) வட்டக் கழகத்தின் சார்பில் விநாயகபுரம் மனநலம் குன்றிய சமர்ப்பணம் இல்லம் மாணவர்களுக்கு 10 நாட்களுக்கு உண்டான அரிசி, பால், முட்டை, காய்கறி வகைகளை வழங்கி கேக் வெட்டி மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. கொண்டாடினார். இந்த ஏற்பாட்டை வட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம் செய்து இருந்தார் உடன் இ. ராமன், சக்கரபாணி, பரமேஸ்வரி, என்.சுரேஷ், ஏ.வி.முருகன், பி.எஸ்.என்.எல்.குமார், கே.நரேந்திரன், எம்.சீனிவாசன், உமா மகேஸ்வரி, செண்பகராஜ், காஞ்சி சண்முகம், வி.பாஸ்கர், ஜி.கஜேந்திரன், சமர்ப்பணம் இல்ல நிறுவனர் ஸ்ரீதர், திருமதி பவானி ஸ்ரீதர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.